
24

# சுட்டி

1, பிப்ரவரி 1983
மாத இதழ்
50 காசு



"ரயில்வே ஊழியர்கள் இந்தி பரீட்சை பாஸ் செய்தால்தான் பதவி உயர்வு என்பது பரிசீலனையில் உள்ளது"— செய்தி.

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010




FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# சுட்டியார் பதில்!



**எம். ஜி. ஆர்., கருணாநிதி இல்லாத தமிழக அரசியல் எப்படி இருக்கும்?**

—மோ. விஜயகுமார், திருப்பூர்

ஒலி பெருக்கிகள் இல்லாத மார்கழி போல் இன்பமாக இருக்கும்.

**வரதட்சணையை ஒழிக்க உருப்படியான ஒரு வழி சொல்லுங்களேன்.**

—முன்னவர்

'கசக்கி பிழிந்து வரதட்சணை வாங்குபவர்களை தன் மானமோ, சுயமரியாதையோ அற்ற பதர்கள்' என்று அருவருப்பான பிராணியை ஒதுக்குவது போல ஒரு சமூகப் புறக்கணிப்பு ஏற்படுத்த வேண்டும்.

**சுட்டியின் விலையை உயர்த்தியது போல பக்கங்களை உயர்த்த வில்லையே ஏன்?**

—ஆர். புவனேந்திரன்

முயன்றோம். கட்டுப்படியாக வில்லை. 33% பக்கங்களை விளம்பரங்களுக்காக ஒதுக்கும் மசாலா பத்திரிகை பொருளாதாரத்துடன், சுட்டியின் பக்கங்களை தயவு செய்து ஒப்பிட வேண்டாம்.

**ஊழல்களை ஒழிக்க உன்னத வழி என்ன?**

—எஸ். கலியாணசுந்தரம், சேலம்

திரும்பித் திரும்பி சொல்ல வேண்டியிருந்தாலும், ஒரே பதில் தான்-மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று, நம்மை ஆள்பவர்களைசரியாக இனம் கண்டு கொள்ள வேண்டும்.

இந்தக் கருப்பு மலரை சுவீகரித்துள்ள வெள்ளை மாது மாதிரி ஏராளமான மேற்கு ஐரோப்பியர்கள் குழந்தைகளுக்காக ஏங்கி வருகின்றனர். இதனைப் பயன் படுத்திக் கொண்டு குழந்தை வியாபார நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடித்து வருகின்றன. ஹாலந்தில் மட்டும் 12 நிறுவனங்கள் இப்படி குழந்தை சப்ளை' செய்து வருகின்றன. கல்கத்தாவின் அநாதை விடுதிகளில் மட்டும் 50,000 குழந்தைகள் வசிக்கின்றனர். இந்தியாவில் உள்ள அநாதை குழந்தைகள் மட்டுமே மேற்கு நாடுகளில் குழந்தையில்லா எல்லா பெற்றோர்களின் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். கடத்தப்பட்டும், ஏமாற்றப் பட்டும் ஏற்றுமதியாகும் குழந்தைகள் சுவீகாரத்திற்கு மட்டுமல்ல, சர்க்கஸ் கம்பெனிகளில், வெள்ளை எலிகளைப் போல ஆய்வுக்கூட பரிசோதனைகளில் பயன்படுத்த, வக்கிரமான செக்ஸ் வணிகத்திற்கு-என்று கொடூரமான முறைகளில் விற்கப் படுவது கண்ணில் செந்நீரை வரவழைக்கிறது.




மேற்கு ஜெர்மனியில் டெர்ஸ்பீஜெல் என்ற பிரபல ஏட்டில் ஸ்டிரைடர் என்பவர் இந்த குழந்தை வியாபரா விவகாரத்தை விவரமாக அம்பலப்படுத்தியிருக்கிறார்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010



# "தெலுங்கு தேச" முதலாளி

தனது முதல் படமான 'மனதேசத்தி' லிருந்து (1949), சமீபத்திய படமான 'நாதேசம்' வரை தான் கடந்த 33 ஆண்டுகளில் நடித்த சுமார் 300 படங்களின் பலனை, என். டி. ஆர். "தெலுங்கு தேச" மாக அறுவடை செய்திருக்கிறார்.

ஓய்விற்குரிய தனது 60 வது வயதில் திடீரென அவருக்கு ஏற்பட்ட புது எழுச்சிக்கு என்ன காரணம்? அடிக்கடி அவர் தேர்தல் பிரச்சாரத்தின் போது இப்படிச் சொல்லிவந்தார் :— "அதிகாரத்துக்காக, கௌரவத்திற்காக, பணத்திற்காக நான் அரசியலுக்கு வரவில்லை, நான் எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டேன். நான் ஒரு சன்னியாசியாக உங்களைப் பின்பற்ற வந்துள்ளேன். பணம், கௌரவம் நீங்கள் தான் கொடுத்தீர்கள். அதற்கு மாற்றாக நான் உங்களுக்குப் பணியாற்ற விரும்புகிறேன்".

லட்சக்கணக்கான பாமர தெலுங்கு மக்கள் என். டி. ஆர். மகா விஷ்ணுவின் கடைசி அவதாரமான 'கல்கி' அவதாரம் எடுத்திருப்பதாக நம்புகிறார்கள். அழிவிற்கு முன் தருமத்தை நிலைநாட்ட அவர் அரசியலுக்கு வந்திருப்பதாக நம்பியே ஏராளமான பேர், ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்.

தனது புராண வேடங்கள் ஏற்படுத்திய பாதிப்பை என். டி. ஆர். அதிக பட்சம், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவுக்கு நேர்த்தியாக பயன்படுத்தியிருக்கிறார். ஆந்திரா அரசியலில் உள்ள வெற்றிடமும், அதிருப்தியான சூழலும் என்டிஆர் தனது திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த கைகொடுத்திருக்கின்றன.

"புலிக்குட்டியே உறுமு" என்ற பாட்டின் மூலம் தெலுங்கர்களின் இன உணர்வை தூண்டிவிட்ட இந்த கிருஷ்ண வேஷக்காரர், கடந்த 40 ஆண்டுகளில் தெலுங்கர்களுக்கு ஆற்றிய பணி யென்ன? இப்போது முன் வைக்கிற அரசியல் கொள்கை என்ன?

சுதந்திர போராட்டத்தில் என். டி. ஆர். சம்மந்தமில்லாமல் இருந்தார். இணைந்த தெலுங்கு தேசத்திற்காக நடத்தப்பட்ட விஷாலாந்திரா இயக்கத்தின் போது அவர் தலை காட்டியதே இல்லை. அது பற்றி பேசியதும் இல்லை. 60வது 70வதுகளில் நடந்த தெலுங்கானா, ஆந்திரா போராட்டத்தின் போது அவர் சென்னை தி. நகரில் இருந்து கொண்டு, தீவிரமாக கோடம்பாக்கம் ஸ்டுடியோக்களில் மேக்கப் போட்டுக்கொண்டிருந்தார்

தெலுங்கு மக்கள் மேல் கரை கடந்த பாசவெள்ளம் பொங்குவதாக பேசுபவர் ஆந்திராவை 77, 79, 82 இல் அலைகழித்த புயல சேதத்தின் போது தனது மக்களுக்காக குறைந்த பட்சம் புயல் நிவாரண நிதி வசூலித்துத் தர கூட முன் வரவில்லை. இரண்டாந்தர நடிகர்கள் கூட வெள்ள நிவாரணத்திற்கு ஆயிரங்கள் வழங்கிய காலத்தில் கூட என். டி. ஆர். பெயர் உதவியோர் பட்டியலில் காணப்பட்டதில்லை.

தனது வாழ்வின் மிகப்பெரும் பகுதியை தமிழ் மண்ணிலேயே கழித்த என். டி. ஆரைப் பற்றி தெலுங்கு நாளிதழ் ஆசிரியர் ஒருவர் "மோசமான சமூக சேவை பதிவேடுடைய என். டி. ஆர். எப்படி தெலுங்கு மக்களின் குரலைப் பிரதி பலிக்கவும், உள்ளுணர்வை எதிரொலிக்கவும், அவர்கள் சுயமரியாதையை ஈட்டவும் முடியும்" என்று கேட்கிறார். தெலுங்கு தேசக் கட்சியின் ஆதரவு நாளிதழின் ஆசிரியர் இவர் என்பது கவனிக்கத்தக்கது.

சரி என். டி. ஆர். மக்களுக்கு சேவை ஆற்றும் எண்ணத்துடன் உண்மையிலேயே இருந்தார் என்றால், அவரது தெளிவான அரசியல் கொள்கை தான் என்ன? ஏற்கனவே ஊழல் பட்டியலில் இடம் பெற்ற காங்கிரஸ், ஜனதா கட்சி உறுப்பினர்களை தன்கட்சியில் அரவணைத்துக் கொண்டதேன்?

ஏற்கனவே மாயைகளில் மூழ்கியிருக்கும் தெலுங்கு சகோதரர்களின் மேல் மேலும் புதிய போதையை ஏற்றுவது போல ராமர், கிருஷ்ணர் வேடத்திலே சுவரொட்டிகள் போட்டு பிரச்சாரம் செய்திருக்கிறார் என். டி. ஆர். குறிப்பிட்ட மதத்தை அல்லது கடவுளரை, தேர்தலுக்காகப் பயன் படுத்தி ஓட்டுக் கேட்பது கூடாது என்று தேர்தல் விதிகள் தெளிவாகக் கூறுகின்றன. அவரது தேர்தல் சட்டப்படி செல்லுமா?

"கட்சி வளரும் வரை நானே அதன் தலைமை செயல் வீரனாக இருந்து தொடர்வேன்" என்பது தெலுங்கு தேச முதலாளியின் பிரகடனம்.

—எழில்

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# கொடிகள்



சுதந்திர தினத்திற்கு குடியரசு தினத்திற்கு
காந்தி நேரு பிறந்த தினத்திற்கு
கொடி ஏற்றி இனிப்பு கொடுக்கிறீர்கள்
பெரியார் பிறந்த தினத்திற்கு
தி. க. கொடி ஏற்றி இனிப்பு கொடுக்கிறீர்கள்.
அண்ணா பிறந்த தினத்திற்கு
தி. மு. க. கொடி ஏற்றி இனிப்பு கொடுக்கிறீர்கள்.
மே தினத்திற்குச் செங்கொடி ஏற்றி
இனிப்பு கொடுக்கிறீர்கள்—இனி
எந்த கொடி ஏற்றி—எங்களுக்குச்
சோறு கொடுக்க போகிறீர்கள்.

இரா. இராஜேந்திரன்



## அரிசன நலஉதவி

காட்டிக் கொடுக்க
சரியான வழி
கர்த்தரைக் கட்டிக் கொள்வது
இன்றைக்கும் எங்கள்
அரசின் கொள்கை

—பறையன்



## வேலை

எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச்
வேலை தராதென்று
யார் சொன்னது?
அங்கேதான் வேலை
பார்க்கிறேன்
கியூவில் நிற்பவர்களுக்கு
சுண்டல் விற்றுக் கொண்டு

—ஞானராஜ்

## பட்ஜெட்

ஏழையின் முதுகில்
விளாசப்படும்
சாட்டை வரிகள்.

—கவிஞர் ரமணகுமார்



# உடலை விட்டுச் செல்லும் பரிசோதனை

"அணுசக்தியைப் போன்ற மற்றொரு மகத்தான சக்தியைப் பற்றிய ரகசியங்களைப் புலன் கடந்த உளவியல் துறை தெரிந்து கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்றார், ரஷ்யாவில் புகழ் பெற்ற லெனின் பரிசு பெற்ற உயிரியிய் விஞ்ஞானி வாசிலியெவ்.

நுண் அணுவிலிருந்து பிறந்த அளப்பறிய சக்தியை வைத்துக்கொண்டு ருத்திர தாண்டவமாடி ஹிரோஷிமா நாக சாதிகளை உருவாக்கிய மனிதன் தன்னிடமுள்ள அதீத சக்திகளையும் அழிவிற்காக பயன்படுத்துவானோ என்ற சந்தேகம் நிரூபிக்கப்படும் தருவாயிலுள்ளது.



இங்கோ ஸ்வான் என்ற அமெரிக்கர் பல அதீத சக்திகளையுடையவர். அவற்றில் ஒன்று தன் உடலை விட்டு செல்லும் அநுபவம் மூலம் இருந்த இடத்திலிருந்தே, தொலை தூரத்தில் நிகழும் பல நிகழ்ச்சிகளை மிகவும் சரியாக அறிவதாகும். இவரை வைத்து அமெரிக்க ராணுவம் பல ஆய்வுகளை நடத்தியது. நோககம்? ஸ்வான் தன் அதீத சக்தி மூலம் தொலைவில் உள்ள மிக ரகசியமான ராணுவ தளங்களைப் பற்றி அறிய முடியுமா? என்பது. ஸ்வான் தளங்களைப் பற்றி மட்டுமல்ல அங்குள்ள ரகசிய ஃபைல்களிலுள்ள விவரங்களைக் கூடச் சரியாக விவரித்து விட்டார்.

இத்தகைய ஆய்வுகளில் அமெரிக்கா மட்டுமன்றி ரஷ்யாவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. நோக்கம்? தங்கள் உளவு முறைகளை விரிவுபடுத்துவதே! நவீன ஜேம்ஸ் பாண்டுகளை அதீத சக்திகளும் உடையவர்களாக காட்டும் சினிமாக்கள் வரும் காலம் இது.

அணு குண்டுகள், நேப்பாம் குண்டுகள் பழங்கதை. தற்போது ரசாயன போர் முறைகள், பாக்டீரியா போர் முறைகள் பற்றி பேச்சு. எதிர் காலத்தில் சைகிக் போர் முறைகள்?

—ரமேஷ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# வாசகர்கள்! விமர்சிக்கிறார்கள் சுட்டி

சென்ற இதழில் விடுத்த மடலினை எதிரொலித்து, சுட்டியின் இதழ்களை விமர்சித்து எழுதிய அத்தனை வாசகர்கள் கடிதங்களுக்கும் நன்றி. கூர்மையாக கவனித்து வரும் நண்பர்களும், கருத்து மாறுபாடு கொண்டோரும் கூட விமர்சன கணைகளை அனுப்பினர். அதில் இட வசதிக்கேற்ப சிலரின், சில பகுதிகளை மட்டும் வெளியிடுகிறோம்.

பிற பத்திரிகைகளை காரசாரமாகவும் கிண்டலாகவும் விமர்சனம் செய்த 'சுட்டி' தன்னையே சுய விமரிசனம் செய்திருந்தால் சுட்டியின் நடுநிலையைப் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் பொறுப்பை வாசகர்கள் மீது சுமத்தி விட்டு தப்பி ஓடி விட்டதாகத் தான் கருத வேண்டும்.

சுட்டி முதல் இதழிலிருந்து படித்து வருகிற வாசகர் என்ற முறையில் சொல்வதென்றால் 'சுட்டி'யின் ஆரம்ப சுட்டித்தனம் இப்போது இல்லை என்றே சொல்ல வேண்டும். 'சுட்டி'யில் விஷயங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதாகச் சொல்லப் படுகிற 'குறை'யை நானும் சொல்லாமல் இருக்க முடியவில்லை,

எது எப்படியிருந்தாலும், மசாலா பத்திரிகைகள்—பெரும் பண முதலைகளின் பத்திரிகைகள், கவர்ச்சி இதழ்கள் போன்ற போட்டிக்கு இடையே எளிய முறையில் சுட்டியை இரண்டு ஆண்டுகள் நடத்திக் காட்டியதற்கு பாராட்டாமல் இருக்க முடியுமா?

—இரஸியல் கலை, தூத்துக்குடி-6,

உன்னை நீ ஆத்ம பரிசோதனை செய்யப் போவதை அறிந்தேன். மகிழ்ச்சி. முதலாளிப் பத்திரிகைகளின் இறுக்கமான திரைக்குள் கிடந்த தமிழக மக்களுக்குப் பெருமளவில் முற்போக்கு உணர்வுகளை ஊட்டிய முதல் இதழ் நீ தான்! 'துக்ளக்' போன்றவை குறை சொல்லி நடத்தியபிழைப்புக்கு உன் வருகையினால் சிறிது மண் விழுந்திருக்கலாம். ஏனென்றால் குறைகளுடன் அவ்வப்போது சில விடிவுக்கான கொள்கைகளையும் கோடிட்டுக் காட்டியிருந்தாய். முழுவதும் வெளியிடவில்லை. (இப்போதைய சூழலில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதும் சற்று ஆபத்து என்றே உணர்கிறேன்.

—வெ. முத்தையா பூமபுகார், மேலையூர்

கொள்கை என்ற வார்த்தை நம அரசியல வாதி, பத்திரிகை ஆசிரியர் முதல் தனி நபர் ஈறாக மிகவும் கேவலப்படுத்தப் படுகிறது. அதில் சுட்டியின் பங்கு? அந்தக் கொள்கை விளக்கந் தான் இந்தச் சிறு பத்திரிகையின் பொடி எழுத்துக்களில் எங்கு ஒளிந்திருக்கிறதோ! சுட்டியின் Origi nality என்ன?

வியாபாரம் செய்கிறோம் என்பதைச் சொல்ல கூச்சம் வேண்டாம். நல்ல புதிய சரக்காகக் கொடுங்கள். பெருமைப் படுங்கள். கொள்கை என்ற இல்லாத கருப்புப் பூனையை சுட்டி என்ற இருண்ட வீட்டில் தேட வைக்காதீர்கள்.

பேரா. எச். வி. விசுவேஸ்வரன், த. பெ. ஜெயின் கல்லூரி, சென்னை

சுட்டி தனது 23 இதழ்களிலும் தைரியமாக தனது கருத்துக்களைத் தெரிவித்து மக்களை விழித்தெழச் செய்கிறது. சுட்டியார் பதில் பகுதி தொடர்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். சுட்டியில் வரும் கவிதைகள் தேன் போல் இனிமை. தோட்டி முதல் தொண்டைமான் வரை அனைவரையும் ஒன்று சேர்க்கும் பத்திரிகை சுட்டி.

—ஆர். ரவி. 9ஆது வகுப்பு அரசு உயர்நிலைப் பள்ளி. வி, வேலூர் ஜெகசிரபாளையம்

சுட்டி தமிழகத்தில் உள்ள முட்டாள்களை அறிவு ஜீவிகளாக மாற்றும் போலி வேஷம் தரித்திருக்கும் கபடப்பத்திரிகை சுட்டியின் முழு பலமும் அதன் எதிர்ப்புக் கொள்கையில் தான் அமிழ்ந்துள்ளது. சந்தேகமில்லை, 'கூட்டுக் குடும்பத்திற்கு வாய்ப்பூட்டு' இது ஒருவகை எதிர்ப்பு. கல்யாண தேர்வுக் கோலம்'. 'மசாலா பத்திரிகைகள் விமர்சனம்', 'எழுத்தாளர் விமர்சனம்' என்று எடுத்ததெல்லாம் எதிர்ப்பு என்பதே சுட்டியின் முக்காலும் முழுதுமான கொள்கை! பலம்! குறையை சுட்டும்போது அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வழிவகையும் தேடவேண்டும்... இல்லையேல் டெலிபோன் இலாகா பற்றி நீங்கள் வெளியிட்ட கார்ட்டூன் அப்பட்டமாக உங்களுக்கும் பொருந்தக் கூடியதாகும். மற்ற சாதா பத்திரிகைகள் போலவே சுட்டியும் வளர்ச்சியில் 30,000 என்ற எண்ணிக்கையை விரைவில் அடையப்போவது மறுக்க முடியாத உண்மை. ஆனால் கை மட்டும் ஒரு சாணிலேயே இருந்தால் என்ன பிரயோசனம்?

—ஜி. சி. எம்., அரசரடி, மதுரை-16

லாட்டரி டிக்கட் பற்றி சுட்டி ஒன்றும் கூறாதது ஏன்? வேடம் போடும் அரசியல் வாதிகளைத் தாக்கும் சுட்டி நல்ல தலைவர்களை ஏன் பாராட்டுவதில்லை. கைரேகை, ஜாதகம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

என்று சொல்லும் பொய்யர்களைப் பற்றி இதுவரை ஏன் எழுதவில்லை?

S. பாலாஜி, D. பாஸ்கர், நாகப்பட்டினம்

☛ புதியவர்களை அறிமுகப் படுத்துகிறோம் என்று அப்படி, இப்படி சொல்லிவிட்டு (செய்தாலும்) சுயராஜ், ஸ்டெனிஸ்லாஸ், எழில், நிலா போன்றவர்களே ஒவ்வொரு இதழிலும் தவறாமல் இடம் பெறுவார்கள். இவர்களின் பணி மகத்தானது என்றாலும் தொடர்ந்து வரும் இவர்களின் ஆக்கிரமிப்பு இதயம் மணியனை நமக்கு நினைவூட்டுகிறது. ஏ.சி. அறையில் உட்கார்ந்து கொண்டு பிரச்சனைகளை அணுகும் சோவுக்கும், அண்ணா நகரில் உட்கார்ந்துக் கொண்டு ‘குடிசை’ பிரச்சனைகளை தமது வெள்ளை பக்கங்களில் மெழுகுவதிலும், சர்குலேஷனை அதிகப்படுத்துவதிலும், கண்ணும் கருத்துமாய் இருக்கும் சுட்டிக்கும் என்ன வித்தியாசம் என்று புரியவில்லை. எழுச்சி புரட்சி என்று பேசித்திரியும் நடுத்தர வர்க்கத்து இளைஞர்களின் உணர்வுகளுக்கு சுட்டி ஓர் வடிகாலாய் பயன்படுகிறது என்பது மட்டும் உண்மை.

—சீ. இரகுராமன், அரும்பாக்கம், சென்னை-106.

☛ பத்திரிகைத் துறையைப் புனரமைக்க வந்த பரமபிதாவாக தன்னை சுட்டி அடிக்கடி உருவப்படுத்திக் கொள்வது தான் பாவமாக இருக்கிறது. சுட்டி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளலாமா? ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதையில் கூறுவார்: ‘மீன் கூடை சுமந்து வந்த பெண்கள் பூக் கூடைகள் உள்ள வீட்டில் படுத்து உறக்கம் வராமல் தவிப்பார்கள்’ என்று.

சுட்டி பூக்கூடை தான், ஆனால் மசாலா பத்திரிகைகள் மயக்கத்தில் இருக்கும் கூட்டத்துக்கு இந்த வாடை பிடிக்காது. ஆனால் என்றேனும் ஒருநாள் அவர்களது நாசிகள் இந்த நறுமணத்தை நுகரும். அதுவரை காட்டுபூக்களாக சிலநாட்கள் இருப்பதில் தவறில்லை.

—அ. ராஜசொர்ணசேகர், சிவகாசி

இதுவரை சுட்டியைப் படித்து வருவோர் எப்படியெல்லாம் நினைத்திருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. சிலர் நினைத்திருப்பது உண்மையிலிருந்து விலகியிருந்தாலும், அவர்கள் அப்படி நினைக்க வைத்திருப்பதற்கு சுட்டியின் போக்கு காரணமாக இருந்திருக்கக்கூடும். எல்லா விமர்சனக் கடிதங்களையும் (இது வரை வந்தவை-வர இருப்பவை) சுட்டி அவசியம் பரிசிலிக்கும். சிந்திக்கும் தவறு என்று உணர்பவற்றை ஒப்புக்கொண்டு சரிப்படுத்திக் கொண்டு முன்னேறும். வெளியிட முடியாவிட்டாலும், தொடர்ந்து விமர்சனங்கள் அனுப்பலாம், எங்களுக்கு உதவியாகவே இருக்கும்.

—ஆசிரியர் குழு

# தமிழ் எழுத்து- சீர்திருத்தம்

இப்போது நூற்றுக்கணக்கான தமிழ் எழுத்து வடிவங்களால் மொழியைக் கற்பவர்களும், தட்டச்சு அடிப்பவர்களும், அச்சுக் கோப்பவர்களும் சிரமப்படுகின்றனர். புள்ளியும், கோடும், காலும் இட தட்டச்சுக்காரர்கள் நிறுத்துவானை அடிக்கடி பயன்படுத்தி இடர்ப்படுகின்றனர்:

ஒரு முழுமையான சீர்திருத்தம் பற்றி சில யோசனைகள்

புதிய முறையில் 24 எழுத்துக்களே உள்ளன. உயிரையும் மெய்யையும் சேர்த்து எழுத வேண்டியது தான்.

உயிரெழுத்துக்கள்: அ, இ, உ, எ, ஒ,—5 (நெடில் வடிவம் இல்லை). மெய்யெழுத்துக்கள் ‘க’ முதல் ‘ன’ வரை-18. ஆய்தம் (ஃ) — 1

இவை தவிர வட சொற்களைப் பயன்படுத்துதல் வழக்கில் இருப்பதால் அச்சு, தட்டச்சு முதலியவற்றை மனத்திற் கொண்டு மேலும் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ ஆகிய 6 எழுத்துக்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆக 30 எழுத்துக்களே.

**புதிய எழுத்துக்களின் தனிக் கோட்பாடுகள்**

1. புள்ளியுடைய ஒற்றெழுத்துக்களே கிடையாது. (க் என்பது க ஆகிறது.
2. நெடில் ஒலிக்கு இரண்டு உயிர்க்குறிலைப் பயன்படுத்துக.
ஆ — அ அ கீ — க இ இ
3. உயிர் மெய்யெழுத்துக்களில் முதலில் மெய்யும் அதனை அடுத்து உயிரும் இடப்படும் எ.டு. தமிழமுதம்— தஅமஇழஅமஉதஅம

மெய்யை அடுத்து உயிரை எழுதும் பயிற்சி ஆங்கிலம் எழுதும் போது பலரும் பெற்ற பயிற்சியாதலால், இது சிறு பயிற்சியால் எளிதில் கை கூடும்.

**மாறிய வடிவங்கள்:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பழையது | ஆ | ஈ | ஊ | ஏ | ஓ | | | | | |
| புதிது | அஅ | இஇ | உஉ | எஎ | ஒஒ | | | | | |
| பழையது | க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை |
| புதிது | க | கஅ | கஅஅ | கஇ | கஇஇ | கஉ | கஉஉ | கஎ | கஎஎ | கஅய |
| பழையது | கொ | கோ | கௌ | | | | | | | |
| புதிது | கஒ | கஒஒ | கஅவ | | | | | | | |

—சஉடடஇ பஅஅரஅதஇ

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010



# “ஏன்?” “எதற்கு?”

நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் முட்டுக் கட்டையாக இருப்பதில் நம் நாட்டு மக்களின் பாழாய்ப் போன சகிப்புத் தன்மை மிக முக்கியமான ஒன்றாகும். மக்களுக்கு எந்த ரூபத்தில் எந்தக் கொடுமை இழைக்கப்படும் போதும் வெகுண்டு எழாமல், சுரீரென்று உறைத்து சடாரென்று நிமிர்ந்து பார்க்காமல் பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக் கொள்ளும் இயல்பினால் அநேக கொடுமைகள் கேட்பாரற்றுப் போவதுடன் தொடரவும் செய்கின்றன.

அரசாங்கத்தாலும், அரசாங்க அதிகாரிகளாலும் துன்புறுத்தப்படும்போது, இழிவு படுத்தப்படும் போது மக்கள் ஏன், எதற்கு என்ற கேள்வி கேட்கும் குறைந்த பட்சம் விழிப்புணர்ச்சிகூட இல்லாது மந்தப்பட்டுக் கிடக்கின்றனர். உதாரணமாக ரயில்வே டிக்கட் வாங்க “க்யூவில்” நிற்கிறார்கள், டிக்கட் கொடுப்பவர் ‘சீட்டில்’ இல்லாமல் எழுந்து சென்று அருகில் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார். க்யூவோ மிக நீண்டு கிடக்கிறது. ஆனாலும் அவ்வளவு பேரில் ஒருத்தனுக்குக் கூட சத்தம் போட்டு கேள்வி கேட்கும் திராணியற்று இருக்கிறார்கள்.

அதைவிட மகாக் கேவல நிலை என்னவென்றால், அந்த ‘க்யூவின்’ நடுவில் ஒருவன் திடீரென்று நுழைந்து கொண்டால் அவனைப் பார்த்து “விலகிப்போ” என்று ஒரு குரல் கொடுக்கக் கூட நாதி கிடையாது. இப்படி கையாலாகாமல் பேடித்தனமாக கண்டும் காணாமல் விட்டுக் கொடுக்கிறார்கள்.

ஓட்டலில் ரூபாய் 2/- கொடுத்து தோசை ஆர்டர் செய்கிறான். எதிரில் இருக்கும் ஒருவனுக்கு நல்ல பொன் கலரில் முழு தோசை வருகிறது. இவனுக்கு தீய்ந்து போய் பிய்ந்த தோசை வருகிறது. ஓட்டல்காரனை அழைத்து இதை எடுத்து விட்டு ஒழுங்காக நல்ல தோசையாக கொண்டு வா என்று அழுத்தமாக சொல்லும் உரிமையை பிரயோகிப்பதில்லை. நம் அதிர்ஷ்டம் நமக்கு தீய்ந்த தோசை வந்து விட்டது. பரவாயில்லை என்று சகித்துக் கொண்டு தின்று தொலைக்கிறான்.

→

“கட்சியில் தவறு செய்பவர்கள் இல்லை. நாங்களெல்லாம் காங்கிரஸ்காரர்கள்”
—ஆர். குண்டுராவ்.



# எமக்கு வந்தவை

***ராகதீபம்:*** (மாத இதழ்) ஆசிரியர்: ஆர். உமாமகேஸ்வரி, 26, ஆரோக்கிய சாமி சாலை, ஆர். எஸ். புரம், கோவை-2.

***ஐயப்பன் சாதுகுரு சாமிகள் பாமாலை:*** (தமிழ் மணி புத்தக பண்ணை வெளியீடு) ஆசிரியர்: டாக்டர் பா. மு. சேதுராமன், கிடைக்குமிடம்: கவியரசன் பதிப்பகம், திருவள்ளுவர் இல்லம், 12, சாயி நகர், இணைப்பு ஐயப்பா நகர், சென்னை-600 111. விலைரூ. 1.50

***சோலைக் குயில்கள் இசைத்த ராகங்கள்:*** (தனிச்சுற்று இதழ்) தொடர்புக்கு: முகில், அறை எண்-4, கென்னடி மாளிகை, 39, பாரதியார் சாலை, திருச்சி-620 008. ஆண்டு நன்கொடை: ரூ. 5

***நம்பிக்கை:*** தமிழ்க்கவிஞர் மன்ற வெளியீடு, கிடைக்குமிடம்: தமிழ்க் கவிஞர் மன்றம், நீலகிரி மாவட்டக் கிளை, ‘நெப்போலியன்’ பூங்கா சாலை, உதகமண்டலம்.

***பொன்னகரம் பாரதி நூற்றாண்டு சிறப்பு மலர்:*** (சமுதாய சுகாதார கலை இலக்கிய ஏடு) ஆசிரியர்: கவிஞர் M. சுல்தான், A-1, பாரதி நகர், கொருக்குப் பேட்டை, சென்னை-600 021. ஆண்டு சந்தா ரூ. 10

***காகிதக் கனவுகள்:*** புதுக்கவிதை தொகுப்பு. மேத்தா தாசன் நர்மதா பதிப்பகம், 10, சோம சுந்தரம் தெரு, சென்னை-600 017. விலை: ரூ. 6.00

---

இந்திய மக்களின் கடந்த கால அடிமை மனப்பான்மையும், சில புரையோடிப் போன தத்துவங்களும், மக்களின் எண்ண ஓட்டத்தையே மொன்னையாக மழுங்கடித்து வைத்திருக்கின்றன. என்று இந்த பேடித்தனத்தின் போர்வையான கோழைத்தனமான சகிப்புத் தன்மையை ஒழித்து “ஏன்” “எதற்கு” என்று தங்கள் உரிமையை அங்கங்கே, அரசாங்கத்திடம் மட்டுமல்லாது தனிப்பட்ட வாழ்விலும் கேட்கும் எண்ணம் என்று மக்களுக்கு ஏற்படுகிறதோ அன்று இந்நாட்டுக்கு சகல விதமான சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்தின் விடி வெள்ளி முளைத்து விட்டது எனலாம்.

—சுயராஜ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

## உதவித்தொகையா? உதவாத்தொகையா?

வருடத்திற்கு ரூ. 2500/- வருமானத்திற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து போன்ற தொழில் நுட்பக் கல்வி பயிலுவதற்கென்று உதவித்தொகை அளித்து வருவது அனைவரும் அறிந்ததே.

மிகப்பெரிய அளவில் அரசின் சாதனையாக விளம்பரப் படுத்தப்படும் இம் மாதிரி சலுகைகளைச் சற்று நுணுகிப் பார்ப்போமேயானால். இதனால் ஏழை மாணவர்களுக்கு ஒரு பயனும் இல்லை என்பது புலனாகும்,

உதாரணத்திற்கு, தட்டச்சுக் கல்வியை எடுத்துக்கொள்வோம். முதல் ஆறு மாத காலத்திற்குள், இக்கல்வியில் கீழ்நிலைத் தேர்வை (Lower Grade) முடிக்க எண்ணி இப்பள்ளிகளில் நுழையும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு ஏழை மாணவனுக்கு மாதம் ரூ. 6/-வீதம் ஆறுமாத காலத்திற்கு ரூ. 36/- பயிற்சிக் கட்டணம் என்றும் பின் தேர்வுக் கட்டணமாக ரூ. 8/-ம் மொத்தம் ரூ. 44/- உதவித் தொகையாக நம் அரசால் வழங்கப்படுகிறது.

இந்த வெறும் 44/- ரூபாயை மட்டுமே சலுகையாகப் பெற்று வரும் ஒரு ஏழை மாணவனுக்கு குறிப்பிட்ட அந்த 6 மாத காலத்தில் இந்தக் தட்டச்சுக் கல்விக்கென்று ஆகும் மொத்தச் செலவு இதைப் போல உண்மையில் 4 பங்காவது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. மாதா மாதம் பயிற்சிக் கட்டணமாக ரூ. 15/- வீதம் 6 மாதத்திற்கு ரூ. 90/-ம், மாதம் ரூ. 3/- வீதம் பேப்பருக்கென்று ரூ. 18/-ம், புக்ஸ்-எய்டு பெற்றுக்கொள்ள ரூ. 10 -ம் தேர்வுக் கட்டணமாக ரூ. 70/- ஆக மொத்தம் ரூ. 188/- ஒரு மாணவனுக்கு செலவாகிறது. ஏறக்குறைய ரூ 200 வரை ஆகும் ஒரு 6 மாதக் காலக்கல்விக்கு அரசு அளிக்கும் உதவித் தொகையோ வெறும் ரூ. 44/- தான். இந்த மிகக் குறைந்த உதவித்தொகையைப் பெறுவதற்கு அப்ளிகேஷன் பாரத்திற்கும், சாதிச் சான்றிதழ் மற்றும் சர்டிபிகேட் நகல்கள் எடுக்க ஆகும் செலவுகளுக்கே ரூ. 20/- வரை ஆகிவிடும் என்ற நிலையில் வசதி இல்லாத ஏழை மாணவர்கள் எப்படி ரூ 200 வரை செலவு செய்து இக்கல்வியைக் கற்க முன் வருவர்?

-தீபன்



படத்தில் உள்ளவரும் இன்னும் 4 பேரும் பிகார் அமைச்சருக்குச் சொந்தக்காரரான ஒரு புதுப்பணக்காரரின் கூலியாட்கள். 11 மாதமாக சம்பளம் தரவில்லையே என்று கேட்ட குற்றத்திற்காக சூடான இரும்பு கம்பியாலும், தடிகளாலும் சென்ற நவம்பர் 11, காலை 10லிருந்து மறுநாள் காலை 11வரை விளாசப்பட்டிருக்கிறார்கள்.

வீட்டுக்காரரான காண்ட்ராக்டரின், இல்லத்தில் ஏற்பட்ட திருட்டுக் குற்றத்தை ஒப்புக்கொள்ள, அல்லது காண்ட்ராக்டரின் பகையாளி ஒருவர் பெயரைச் சொல்ல வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். சித்ரவதையில் கண்களைப் பிடுங்கி குருடாக்கவும் முயன்றனராம்.

உடலெல்லாம் ரணமானதற்கு, மருத்துவமனை பக்கமே போகக்கூடாது என்று கூட பயமுறுத்தப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்டவரில் ஒருவர் காண்ட்ராக்டரின் பள்ளியில் இரவு காவலர். பாதிக்கப்பட்ட காவலர் மகன் அங்கு பியூன். இவர்கள் பள்ளிக்கு ரூ 3000/- கட்டாய நன்கொடை கொடுத்தே வேலை பெற்றனர். ஆனால் சம்பளத்தை மாதக்கணக்கில் பார்க்கவில்லை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

**சுட்டியின் புது விமர்சனப் பகுதி**

# முற்போக்கு பத்திரிகைகள் எழுக!

இந்த சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துவதில் தன்னலமில்லா முற்போக்கு சிற்றேடுகளின் பணி மகத்தானது!

இந்த நாட்டின் சமுதாய அவலங்களுக்கும், அநீதிகளுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் சுரண்டலுக்கும் சாவு மணி அடித்து ஒரு சரியான சமதர்ம சமுதாயத்தை மலர வைக்க தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இந்தச் சிற்றேடுகளின் எண்ணிக்கை குறைவு தான். அதன் வாசகர்கள் அதிகமில்லைதான். எனினும் மசாலா எழுத்தாளர்களை விட ஆக்கப் பூர்வமாக, ஆழமான அழகுடன் எழுதுபவர்கள் இந்த சிற்றேடுகளில் மறைந்திருக்கிறார்கள். இந்த சிற்றுளி எழுத்துக்களின் கூர்மை உறைந்திருக்கிறது.

நம்மை மேலும் மேலும் மடையர்களாக்கி, மந்தப்படுத்தி, காசு ஒன்றையே குறியாகக் கொண்டு எழுத்து வேசித்தனம் செய்யும் மசாலா ஏடுகளின் நச்சுக் காற்றிலிருந்து நமது வாசகர்களை மீட்க முயல்வதுடன், நமக்குச் சரியான பாதை காட்ட முயலும் ஆரோக்கியமான முற்போக்கு சிற்றேடுகளின் சுகந்த நறுமணத்தையும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியாக வேண்டும்.

ஜீவ மரண போராட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பவை, மின்னலெனத் தோன்றி ஒளி உமிழ்ந்து மறைந்தவை, குறிஞ்சி மலராக அவ்வப்போது மட்டும் பூத்து மலர்பவை; ஓர் அமைப்பின் நிதியைப் பின்னணியில் கொண்டு தொடர்ந்து வருபவை என்று இவற்றில் பலரகம் உண்டு.

இந்த முற்போக்கு இதழ்கள் அனைத்தும் இணைய வேண்டும் என்று முன்பு சுட்டி விடுத்த குரலுக்கு எதிரொலித்த ஏடுகள் மிகச் சிலவே. எனினும் இந்தக் குரல் தொடர்ந்து ஒலிக்கும். முன்பை விட பலமாக ஒலித்துக் கொண்டேயிருக்கும். முற்போக்கு இதழ்களின் கூட்டணி வரப் போகும் நாட்களில் எவ்வளவு அவசியமானது என்பதை விரைவில் தோழர்கள் உணர்வார்கள்.

→

சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும், அடிப்படையில் சோஷலிச லட்சியத்தை ஏற்று ஒரு மாபெரும் சமுதாய மாற்றத்திற்காக எழுத்தை பயன்படுத்தும் ஏடுகளையெல்லாம் நாம் முற்போக்கு ஏடுகள் எனக்கொள்கிறோம்.

இந்த ஏடுகள் இன்னும் நிறைய பேர்களை எட்ட வேண்டும். அதற்கான சகல நியாயமான உத்திகளையும், கடும் உழைப்பையும், மக்கள் நலனை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டுவது இவ்வேடுகளின் கடமை. மீண்டும் மீண்டும் சகபத்திரிகைக் காரர்களுக்கும், தெரிந்த நண்பர்களுக்கும், ஏற்கெனவே ஆதரவு தந்துகொண்டிருக்கும் அறிவு ஜீவிகளுக்கும் மட்டும் அனுப்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

குமுதம் படிப்பவர்கள் ராணி படிப்பவர்கள், தந்தி படிப்பவர்கள் வீடுகளுக்கும் இவை போயாக வேண்டும். அங்கு தான் அவசியம் போயாக வேண்டும். திசை திருப்பப் பட்டவர்களையும், போதையில் ஊறிக் கிடப்பவர்களையும் இவை ஊடுருவி உசுப்ப வேண்டும்.

தமிழ் கொஞ்சம் படிக்கத் தெரிந்தவர்களையெல்லாம் கூட வலை விரித்து படிக்கச் செய்து, விற்பனையில் ஆசிய சாதனை புரியும் மசாலா ஏடுகளின் எளிமையும், புதுமையும், பத்திரிகையியல் உத்தியும் நாம் கவனிக்க வேண்டியவை. தவறான காரியங்களுக்காகப் பயன் படுத்தப் பட்டு வரும் இந்த உத்திகள் மக்களை விழிப்பூட்ட பயன்படுத்தப்படுவதில் தவறில்லை.

எனவே இந்த ஏடுகள் தமிழ் தெரிந்தோர் இல்லங்கள் தோறும் பரவும் நிலை வரவேண்டும். வரவழைக்க வழி செய்ய வேண்டும். புதிய இயக்கமொன்று சரியான பாதையில் அமையும் பின்னணியை ஏற்படுத்துவதில் இந்த முற்போக்கு இதழ்களின் எழுத்திற்கு நிறைய அவசியம் இருக்கிறது,

இந்த வேட்கையுடன் சுட்டி முற்போக்கு இதழ்களை நம் வாசகர்களுக்கு இனி இதழ்தோறும் அறிமுகப்படுத்தும். பலருக்கு இன்னும் அறிமுகமாகாத இந்த இதழ்களின் பணியை வெளிச்சம் போட்டுக் காட்டுவதும், அந்த நல்ல இதழ்களை படிக்க வேண்டும் என்ற ஆசையை வாசகர்களுக்கிடையே ஏற்படுத்துவதும், இத் தொடரின் நோக்கம். சுட்டி நல்லவற்றை சுட்டிக் காட்டுவதையும் தனது பணியாக நினைத்து இம்முயற்சியில் இறங்குகிறது.

அடுத்த இதழில் : "தேன்மழை"

— ஆசிரியர்குழு

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

## நமது கீரை மருத்துவம்

விலை மல்'வான சாதாரண பொருட்கள்'லும், நிறைய பலன்களைப் பெற முடியும் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு கீரைகள். சில முக்கிய கீரைகளின் பயன்கள்:—

**அரைக்கீரை:** தினமும் உண்ணத்தக்க கீரைகளில் இது தலையானது. எவ்வகை நோயாளிக்கும் ஏற்றது. கண்பார்வை இரத்த நாளங்கள், ஜீரண உறுப்புகள் போன்றவற்றை நன்னிலையில் பாதுகாக்கும். பிரசவமான மகளிர்க்கு உடனடி ஊட்டம் அளிக்கும்.

**மணத்தக்காளி:** வாய்பபுண், வயிற்றுப்புண்ணுக்கு கண்கண்ட சஞ்சீவி. மூல நோய், குடல் அழற்சி கட்டுப்படும். குரல் வளம் பெருக்கும். அல்சருக்கு அற்புத மருந்து. வாரம் 2 முறை உண்ணத்தக்கது.

**பசளைக்கீரை:** மலச்சிக்கலை விரட்டும். ஆண்மையைப் பலப்படுத்தும். குளிர்ச்சி தரும் இக்கீரையை ஆஸ்துமா, போன்ற நோயுடையவர்கள் கோடை காலத்தில் மட்டுமே உண்ணவும்.

**வெந்தியக்கீரை:** வாயுவைக் கண்டிக்கும். கல்லீரலை சுறுசுறுப்பாக்கும். புரதம், தாதுக்கள், வைட்டமின் 'சி' இதில் ஏராளம். வாரம் 1 முறை உண்டு வர மூட்டு வலி, இடுப்பு பிடிப்பு போன்றவை நீங்கும். சிறுநீர் கோளாறு அண்டாது.

**முளைக்கீரை:** எவ்வயதினரும், தினமும் உண்ணக்கூடியது. நல்ல பசியைத் தூண்டும். காச நோயின் போது வரும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.

**அகத்திக்கீரை:** வைட்டமின், இரும்புச்சத்து, சுண்ணாம்பு சத்து நிறைந்தது. விஷங்களை முறிக்கும், கண்பார்வை நரம்புகட்கு வலிவூட்டும். கிருமிகளைக் கொல்லும் ஆனால் இதனை வயிற்றுக் கோளாறுடையோர், வயோதிகர் உண்ணலாகாது, மாதம் ஒரு முறையே இது உண்ணத்தக்கது.

**கரிசலாங்கண்ணி கீரை:** முதுமைத் தோற்றத்தைக் கட்டுபடுத்தும். கண்பார்வை தெளிவுறும். பல நோய்கள் வராது இரைப்பையை வலிவாக்கும்.

**புளியாரைக் கீரை:** வள்ளலாரால் கல்பத்திற்கு இணையாக இது பேசப்படுகிறது. கபம், பித்தவாயுவையும் கண்டிக்கும். மூலநோய், நாட்பட்ட கிராணி இவற்றிற்கு மாமருந்து.

—**சித்தன்**

## பாஸ்போர்ட் விவகாரம்

வெளிநாடு செல்ல சுயமாக பாஸ்போர்ட், எடுக்க விரும்பினால், அஞ்சலகத்தில் விண்ணப்பம் வாங்கி பூர்த்தி செய்து ரூ 50 க்கு அஞ்சல் தலை ஒட்டி ஒரு எம்.எல்.ஏ அல்லது நீதிபதி அல்லது குறைந்த பட்சம் அரசு துணைச்செயலர் அந்தஸ்தில் இருப்பவரிடம் அத்தாட்சி கையெழுத்து வாங்கி, பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

இப்படி பாஸ்போர்ட் வாங்கித் தருவது வருவாய் உள்ள தொழிலாகி பல டிராவல் ஏஜென்சிகள் பெருக ஆரம்பித்து விட்டன. இவர்களிடம் ரூ 125/-கொடுத்தால் 10 நாட்களுக்குள் நாமே நேரே வராமல் பாஸ்போர்ட் எடுத்து தருகிறார்கள். மாமூல் கொடுத்து நிறைய எம்.எல்.ஏக்களை அல்லது அரசியல் வாதிகளுக்கு வேண்டிய பேட்டி ரவுடிகளை இவர்கள் கைவசம் வைத்திருக்கிறார்கள். கடத்தல் தொழில் செய்ய வெளி நாடு செல்பவன் கூட ரூ 125 இல் 'உன்னதமானவன்' என்று அத்தாட்சி பெற்று 1 வாரத்தில் விமானம் ஏற்ட முடியும்.

சில 'புத்திசாலி' எம்.எல்.ஏ, எம்.பிக்கள் தங்கள் பினாமிகளின் மூலம் நிறைய டிராவல் ஏஜென்சிகள் நடத்தி வருவாய் பார்த்துக் கொண்டிருப்பதால் தான் அரசு தொடர்ந்து, இந்த மாதிரி நடப்பது தெரிந்தும், தெரியாதது போல உறங்க்க் கொண்டிருக்கிறது.

நேர்மையான முறையில நாணயமாக வெளிநாடு செல்வோர் பாஸ்போர்ட் விரைவில் பெற மாவட்டங்கள் தோறும் பாஸ்போர்ட் அலுவலகங்களைத் திறக்க வேண்டும்.

மருத்துவர்களோ, தொழில் நுட்ப வல்லுநர்களோ வெளிநாடு செல்ல, அவர்கள் படித்த நிறுவனங்கள் மூலம் அத்தாட்சி வழங்கச்செய்யலாம். உல்லாசப் பயணிகள் தங்கள் வருவாய் துறை அதிகாரியிடம் அல்லது தாங்கள் பணியாற்றும் அலுவலகத் தலைமை அதிகாரியிடம் அத்தாட்சி பெற அனுமதிக்கலாம்.

இதை விட்டு விட்டு முன்பின் தெரியாத அரசியல் வாதிகள் அதிகாரிகளிடம் அலையவிடுவது, சிலரைக் கொழுக்க வைக்க பாஸ்போர்ட்டை ஒரு சாதனமாக அரசு அனுமதிக்கிறது என்பதையே உறுதியாக்கும்.

—**கா. இராமச்சந்திரன்**

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# திரேந்திர பிரம்மச்சாரி — யார்?

ரஷ்யாவில் ஜார் நிக்கோலஸ் முடியாட்சியில், அரச குடும்பத்தைக் கையில் போட்டுக் கொண்டு ரஸ்புதீன் சாமியார் செய்த கைங்கரியங்கள், அட்டகாசமானவை. இந்தியாவிலும் இந்திரா ஆட்சியில் ஒரு ரஸ்புதீன் இருக்கிறார். சுவாமி திரேந்திர பிரம்மச்சாரி அவர் பெயர்.



யாராலும் நிறுத்த முடியாத, ஜார் மன்னன் மகனின் பரம்பரை இரத்தப் போக்கை, தனது சக்தியால் ரஸ்புதீன் நிறுத்திக் காட்டினார். அதுவே அந்த ரஷ்ய சாமியாரின் அரசியல் செல்வாக்கிற்கு நுழைவாயிலாக அமைந்தது.

ஜம்மு அருகே ஒரு குக்கிராமம், இந்திரா காந்தி உடல் நலிவுடன் தங்கியிருக்கிறார். அப்போது திடீரென குதிரை மேல் தோன்றிய திரேந்திரர், இந்திராவின் நோயைத் தீர்த்தார். பின்னர் ஒரு முறை சஞ்சய்யையும் குணப்படுத்தினார். இதன் தொடர்ச்சியாக இந்திரா காந்தி குடும்பத்துக்கும் பின்னர் பிரபல அரசியல் பிரமுகர்களுக்கும் யோகாசனம் போதிக்கும் குருவானார். (மொரார்ஜீ, ஜே. பி. உட்பட)

ரஸ்புதீனின் ஆற்றலுக்கு திரேந்திரர் சளைத்தவரல்ல. யோகாசனத்தில் இவரது வல்லமை ஆச்சர்யகரமானது. பயிற்சியால், தனது முதுமைத் தோற்றத்தை, நரையை வென்றிருக்கிறார். இமயச்சாரலின் 'மைனஸ்' குளிரிலும் மேலாடையின்றி திரிகிறார். ஆனால் ரஸ்புதீன் வெறும் சாமியாராகவே இருந்தார். திரேந்திரர், பெரிய முதலாளியாக, கோடீஸ்வரராக "வெளகீக" சாமராஜ்யம் அமைத்து வருகிறார். விதவிதமான விமானங்களில் பறக்கிறார்.

யோகாசான சாமியாராக அறிமுகமாகி, அரசு ஆசியுடன் இவர் அசாத்திய சலுகைகள் பெற்று தனது சாம்ராஜ்யத்தை கேள்வி முறையற்று விரிவுபடுத்தி வருகிறார். நெசவாலைகள், இரும்பு ஆலைகள், பன்னாட்டு வியாபார ஒப்பந்தங்களை அமைக்கும் வணிகம், விமானம் வாங்கித் தரும் வியாபாரத் துறைகளில் இவர் கை ஓங்கி வருகிறது. →

இந்தப் பறக்கும் சாமியார், தனது மர்மமான இளமையை மறைப்பதில் மிகவும் அக்கறையுடனிருக்கிறார். வட பீகாரில், நேபாள எல்லையில் உள்ள தனது கிராமத்திலிருந்து வெறும் எட்டணா காசுடன் ஒடி வந்து 14 வயதில் சாமியாராகியிருக்கிறார் என்பது மட்டும் தெரிய வந்துள்ளது.

சாமியார் வியாபாரத்தில் மிக எச்சரிக்கையானவர். ராஜிந்தர் மிட்டால் என்ற ஹரியானா வியாபாரி பெயரில் தான் இவர் வணிகத் தொடர்பு நடக்கும். மெல்ல அது சாமியாருக்கு மாற்றப்படும். சாமியாரின் ஜகதலப்பிரதாப வேலைக்கு ஓர் உதாரணம்:—

சஞ்சய் இறந்தவுடன், சஞ்சயின் டார்னியர் விமானத்தை வாங்க நினைத்தார். போட்டியாக சில இளம் விமானிகள் ஒரிசாவிலிருந்து இதனை வாங்க முயன்றனர். பிரம்மச்சாரி, மாநில அரசின் வழியாக அவர்கள் ஓட்டுநர் லைசென்சை ரத்து செய்ய வைத்தார். பின்னர் நிலைமையை சாதகமாக்கி, மலிவாக ரூ 6.5 லட்சத்திற்கு போட்டியின்றி விமானத்தை வாங்கினார். சாமி வாங்கினாலும் பணம் கொடுத்தது ராஜிந்தர் மிட்டல் தான்.

சாமியார் துப்பாக்கி உற்பத்தி செய்ய அரசு அத்துமீறிய சலுகை வழங்ய போது "இந்த நாட்டை ஆள்வது யார்? மத்திய அரசா அல்லது திரேந்திர பிரம்மச்சாரியா?" என்று பழைய காங்கிரஸ்காரர் ஏ. ஜி. குல்கர்னி போன்றோர் எதிர்ப்புக்குரல் கொடுத்தனர்.

அவசர காலத்தில் இந்த ஆஸ்ரமவாசி வளர்த்த லௌகீக சாம்ராஜ்யங்கள் எவ்வளவு தில்லு முல்லானவை என ஷா கமிஷன் விசாரணை வெட்ட வெளிச்சமாக்கியது:—

1 சட்ட விரோதமாக வெளி நாட்டிலிருந்து விமானத்தை இறக்குமதி செய்தது.

2 ரூ 1.68 லட்சம் மத்திய யோகாசன ஆய்வு நிலையத்திலிருந்து கையாடியது.

3 விலையுயர்ந்த மெர்சிடெஸ் பென்ஸ் கார் வாங்க போலி பத்திரங்களைத் தயாரித்தது.

4 விபச்சாரத்தில் ஈடுபட்டது.


இத்தனைக் குற்றச்சாட்டுகளும் இந்திரா மீண்டும் அதிகாரத்துக்கு வந்ததும் ரத்து செய்யப்பட்டன.

சாமியார் இப்போது தனது அபர்ணா ஆஸ்ரமத்தின் கிளையை ஜம்முவின் மிக முக்கியமான காந்தி நகரில் →

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

அமைக்கிறார். இங்கு தான் தலைமை காவல் நிலையங்களும் உளவுத்துறை அலுவலகங்களும், விமான நிலையங்களும் உள்ளன. இங்கு யாரும் 2 மாடிக்கு மேல் கட்டடம் எழுப்ப தடையுள்ளது. ஆனால் சாமியாரின் ஆஸ்ரமக் கட்டடம் ஏற்கனவே 4 மாடிக்கு எழுப்பப்பட்டுள்ளது. ஜம்மு நகராட்சிக் கழகம் வாயைப் பொத்திக் கொண்டிருக்கிறது.

1976 இல் பிரம்மச்சாரி தனது சொந்த விமானத்தளத்தை ஜம்முவின் மந்தலையில் அமைக்க விண்ணப்பித்தார். அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் பன்சிலால் தலையீட்டால் அனுமதி கிடைத்தது மட்டுமின்றி பார்டர் ரோடு ஆர்கனைசேஷனின் கருவிகளையே விமான தளம் அமைக்கப் பயன் படுத்திக் கொண்டார்.



இந்திரா மீண்டும் பதவிக்கு வந்த போது விமானத்தளம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. கம்பியில்லா கருவிகளை அமைக்க தனி அனுமதி வழங்கப்பட்டது,

மலைப்போல இவரது விவகாரங்கள் பெருகி வந்தாலும், இந்த வியாபார விஷயங்கள் எதிலும் தனக்கு சம்மந்தமில்லையென்றும் தான் வெறும் யோகாசன ஆசிரியன் என்றும் சாமி திரேந்திர பிரம்மச்சாரி சொல்லி வருகிறார்.

—ஸ்டேட்ஸ்மேன்

கொண்டது இதற்கு வழங்கப்படும். ரூ 1 லட்சத்தில் ரூ 33,000 (அரசுக்கு சேர வேண்டிய வரிப்பணம்) மறைமுகமாக ஒவ்வொரு குடிமகனும் வழங்குவதாக ஆகிறது. எனவே ஒரு பாரத நாட்டின் சுதந்திர குடிமகன் ஒரு பணக்கார மனிதனின் சுய நன்மைக்காக அவன் செலவிடும் தொகையில் 33 சதவீதம் ஏற்கும்படி கட்டாயப்படுத்தப்படுதல் நியாயமா?

இங்ஙனம் லட்டு வழங்கிடப்படல் நியாயமெனில், ஒரு முஸ்லீம், சுமார் 10,000 ஆடுகளை, அல்லாவின் பெயரால் நமாஸ்வாலா செய்து தமக்கு வேண்டியவருக்கு விருந்து படைத்து விட்டு, செலவை வரிவிலக்கு கோர முடியுமல்லவா?

இது எந்த வகையில் நியாயம் என்பதை பொதுமக்களும், வரிச்சட்ட நிபுணர்களும் சொல்வார்களா?

ஒபினியனிலிருந்து:— ராணியொருபாகன்

# திருப்பதி லட்டு தானம்

கடந்த ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஒரு பிரம்மாண்டமான புகழ் வாய்ந்த திட்டம் எனும் பெயரில் விளம்பரம் வெளியிட்டிருந்தது. அதில் வருடத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பக்தர்களுக்கு லட்டு தானம் செய்ய நிரந்தரமாக விரும்பும் பக்தர் ஒருவர், ரூ 1 லட்சம் நன்கொடை தந்தால், அதில் கிடைக்கும் வட்டி மூலம் 25 கிராம் எடையுள்ள 25,000 லட்டுகள் தயாரிக்கப்பட்டு அவர் பெயரால், அவர் விரும்பும் நாளில் வழங்கப்படும். மேலும் அன்றைக்கு தேவஸ்தானத்தின் சார்பான வி. ஐ. பி ஆகவும் அவர் நடத்தப்படுவார் என்று சொல்லப்பட்டது.

இந்த திட்டம் ஏப்ரல் 5, 1981 முதல் அமுலுக்கு வரும் எனவும், இத்திட்டத்திற்கு வழங்கப்படும் நன்கொடை, பிரிவு 80, G, (2) (b)ன் வருமானவரி சட்டப்படி வரிவிதிப்புக்கு விலக்காகும் எனவும் சொல்லப்பட்டிருந்தது.

ஒரு மதசார்பில்லாத நாட்டின் (நமது?) அரசியல் அமைப்புபடி, நாட்டின் ஜனாதிபதி முதல் தெருவோரம் பசியால் வாடும் குடிமகன் வரையில், சொர்கத்தில் இடம் பெறவோ, அல்லது ஆன்மீக நெறி உணர்வை அடையவோ அரசின் வருமானத்தைப் பயன்படுத்தக் கூடாது, முடியாது என்பதே உண்மை.

தர்மஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள் 80, G, (2) (b) ன்படி ஒருநபர் வரி செலுத்த கணக்கிடப்படும் பொழுது கடந்த ஆண்டில் நன்கொடை நிதியாக ஏதாவது கோவில், மசூதி, சர்ச், குருத்துவாரா புகழ்வாய்ந்த கோவில்ஸ்தலம் அல்லது அரசால் குறிப்பிடப்படும் தொல் பொருள் அல்லது கலைப்பூர்வமான முக்யத்வம் வாய்ந்த இடம், இவற்றில் நடைபெறும் நிர்மாணம் அல்லது பழுதுபார்க்கும் பணிகளுக்கு அளிக்கப்பட்டிருப்பின் மொத்த வருமானத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படலாம். 2 (b) expl.3ன்படி தர்ம காரியங்கள் என்பது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மதத்தின் தன்மை கொண்டதாக இருக்கக் கூடாது.

ஆக லட்டுகள் வழங்க நன்கொடை அளிப்பது இந்தப் பிரிவுக்குள் எப்படி வரும்? மேலும் இது மதத்தின் தன்மை

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# வாசகர் குரல்

## பயனற்ற நூலகம்:

☐ வருடாவருடம் விவசாய அறிஞர்களை ,தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளிக் கொணர்வது அனைவரும் அறிந்ததே, ஆனால் இதன் பழமை வாய்ந்த நூலகத்தை உபயோகிக்க, ஆர்வமிக்க பொது ஜனமாயினும், ஆராய்ச்சி மாணவராயினும் வெளியார் என்றால் உள்ளே நுழைய நினைக்கவும் முடியாது. இதற்கு நூலகரின் சிறப்பு அனுமதி வேண்டுமாம். அனுமதி பெறுவதை விட குதிரைக் கொம்பு கிடைப்பது எளிது.

எந்தப் பொது பல்கலைக் கழக நூலக ஊழியர்களை விடவும் அதிக விடுமுறை நாட்களை அனுபவிக்கும் இதன் ஊழியர்கள் நூலகத்தின் உண்மை நோக்கம் அதிகபட்ச மக்களுக்கு அறிவொளி யூட்டுவதே என்பதை உணராத வரை மக்கள் வரிபணத்தில் கொழுக்கும் இந்நூலகம் இருந்து என்ன பயன்?

—திரம், கோவை

## அஞ்சல் தாமதங்கள்:

☐ அஞ்சலகங்களுக்கு முன்பெல்லாம் விடுமுறைகள் குறைவாக இருந்தன. விடுமுறை நாட்களில் ஒரு அஞ்சல் பட்டுவாடா ஒரு மணி நேரம் கார்டு, கவர் விற்பனை இருந்தது. இப்போது விடுமுறை நாட்கள் அதிகம். ஆனால் ஒரு மணி நேர விற்பனையோ, ஒரு அஞ்சல் பட்டுவாடாவோ கிடையாது. ஓவர்டைம் கொடுப்பதை நிறுத்துவதற்குத்தான் அரசு இவ்வாறு செய்கின்றது என்று ஊழியர்கள் கூறுகின்றார்கள். R. M. S இலும் ஓவர்டைம் கொடுப்பதை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் தபால்கள் மிகவும் தாமதமாகப் போய்ச் சேருகின்றன.

தவறான வழிகளில் கோடிக்கணக்கில் அரசியல் வாதிகள் சம்பாதிக்கும் போது அரசு ஊழியர்களுக்கு சிறிது கொடுத்தால் குறைந்து விடுவார்களா என்ன? அதுவும் இனாமாக இல்லை; கூடுதல் நேர வேலைக்காக.

—மதுரை மணியன் சென்னை

## காவல் நிலையத்தை மாற்றுக:

☐ மதுரை கிழக்குப் பகுதியில் கொலை, கொள்ளை கலவரம் நடை பெறாத நாட்களை எண்ணி விடலாம். அந்த அளவுக்கு அநியாய அக்கிரமங்கள் கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால் இப்பகுதியில் காவல் புரிய வேண்டிய B-2 காவல் நிலையமோ ஜன நடமாட்டமில்லாத மாரியம்மன் தெப்பக்குளம் அருகில் உள்ளது. இதனை மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியான காமராஜபுரம், முனிச்சாலை ரோடு பகுதிக்கு மாற்றினால்தான் அட்டூழியங்கள் குறைய வழியுண்டு. காவல்துறை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் விரைவில் காவல் நிலையத்தின் இடத்தை மாற்றுவார்களா?

—திசை, மதுரை-9

## சாலையோரத்து யமன்கள்:

☐ நெடுஞ்சாலை பராமரிப்புத்துறையின் கீழ் உள்ள மரங்கள் பட்டுப் போனால் அதை அப்படியே கவனிப்பாரற்று விட்டு வைக்கிறார்கள், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து ஏலம் விட்டு பணம் அரசிற்கு சேர்ந்தால் நல்லது. இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டதற்கு அவர்கள் கூறிய பதில் விசித்திரமானது.

மரம் பட்டுப் போய் நின்று கொண்டிருக்கும் வரை அதை ஏலம் விடவோ, வெட்டவோ கூடாதாம். அது தானாகவே கீழே விழுந்தால் தான் அதன் மீது நடவடிக்கையாம். இது அவர்கள் இலாக்காவின் விதியாம்.

அது தானாக யார்தலை மீதோ, போகும் வரும் வாகனத்தின் மீதோ விழ வேண்டும். பிறகு தான் அதைப்பற்றி கவனிப்பார்கள் போலுள்ளது. எங்கள் ஊரில் ஆறுமாதத்திற்கும் மேலாக காய்ந்த மரம் நின்றவண்ணம் யார் வரவையோ (ஆட்களோ, வாகனமோ) எதிர்பார்த்தவண்ணம் விழ தயாராக உள்ளது.

—அ. குப்புசாமி, காந்திகுப்பம்


ரங்கா டைப் பௌண்ட்ரி

☐ போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
☐ நவீனமான அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்.

அலுவலகம் : 73 ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி.
சென்னை-112

தொழிலகம் : 38, குட்டிசெட்டி தெரு, பெருமாளபேட்டை,
தொலைபேசி : 37999, 664293 சென்னை-7


FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

• சிறுகதை

# தலைச் சுமை







"யம்மோய்... இஸ்கோலுக்கு போறேன். இன்னிக்காவது பொஸ்தகம் வாங்கிக் கொடும்மா...!"

மகள் கூறியதைக் கேட்டதும் குப்பாயி பெரு மூச்சுதான் விட்டாள்.

"சரி ராஜாத்தி இன்னிக்கு நா ஒனக்கு கண்டிப்பா பொஸ்தகம் வாங்கிக்கினு வருவேன்."

இப்படித் தான் ஒவ்வொரு முறையும் மகளைச் சமாதானப்படுத்துவாள் குப்பாயி. கூடை சுமந்து வாழைப்பழம் விற்பதன் மூலம் அப்படி எவ்வளவு தான் சம்பாதிப்பாள்? நூறு பழம் விற்றால், இரண்டு ரூபாய் கூலி! "இன்னிக்கு எப்படியாவது செரமப்பட்டு பட்டினி கெடந்தாவது ராஜாத்திக்கு பொஸ்தகம் வாங்கிப்பிடனும்.?

மார்க்கெட் பகுதியில் பழங்களை கடை பரப்பிருந்தாள் குப்பாயி. முப்பது பழம் ஓடி விட்டது! வந்த அரை மணியில் ஐம்பது காசு லாபம் சேர்ந்ததில் குப்பாயிக்கு கொள்ளை மகிழ்ச்சி. எல்லார் கவனத்தையும் ஈர்க்கும் படி திடீரென்று ஒருவன் கத்தியுடன் ஓடி வர, அவனைத் துரத்திக் கொண்டு விரைவாக வந்த போலீஸ் வேன் திடீரென்று நின்றது. அதிலிருந்து சிதறி ஓடிய போலீஸார் சிறிது நேரத்தில் "கத்தி மனிதனை"ப் பிடித்து வண்டியிலேற்றினார்கள். ஒரு போலீஸ்காரர் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டே குப்பாயி கூடையருகே வந்து இரண்டு பழங்களை உரிமையோடு எடுத்து சாப்பிட்டார்.

"அண்ணே...வாங்க, ரெண்டு எடுத்து சாப்பிடுங்க."

பரந்த மனப்பான்மைக்கு சொந்தக்காரர் போலும்.

"டக், டக்" என்று 'பூட்ஸ்' கால் ஒலிக்க மடமடவென்று

# மனைவியை அடிப்பவர்கள்...

'பெண்என்றால் பேயும் இரங்கும்' —இது பித்தலாட்டமான கட்டுக் கதை என எரிச்சலக்குகிறது பெண்கள் அமைப்பு ஒன்றின் ஆய்வு-சமீபத்தில் பம்பாயில் பெண்கள் மீதான தாக்குதல் என்பது பற்றிய கருத்தரங்கு நடந்தது. பெண்கள் அமைப்பு வெளியிட்ட ஆய்வின் தகவல்கள் மனைவியை அடித்துப் பிழியும் ஈனப் பிறவிகள் படித்த வட்டாரத்திலும் நடமாடுகிறார்கள் என்பதை அம்பலமாக்கியுள்ளது.

வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், நிர்வாக அதிகாரிகள், நிறைய சம்பாதிக்கும் வர்த்தகர்கள்—இப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் மனைவியர் தந்துள்ள தகவல் நம்மை அதிர்ச்சிப் படுத்துகிறது. "வீட்டில் மனைவியைக் கையால் அடிப்பது, தடியால் தாக்குவது, இரும்புத் தண்டால் அடிப்பது கத்தி, கரண்டி இவற்றால் இடிப்பது, மனைவியின் அடிவயிற்றில் உதைப்பது, கருவுற்றிருந்த போது வயிற்றின் மீது உட்கார்ந்து கொள்வது" என நீண்டு செல்கிறது.

பணம் சம்பந்தப்பட்ட கருத்து வேறுபாடு, பொறாமை, மனைவியின்நடத்தையில் சந்தேகப்படுவது, கணவன் உறவினர் தூண்டுதல், வீட்டு வேலை, குடிப்பழக்கம், மனைவி வெளியில் வேலை பார்ப்பது குழந்தைகள் சம்பந்தமாக ஏற்படும் தகராறு, கணவன் வெளியில் வைத்துக் கொள்ளும் காதல் தொடர்புகள்" —இவை இந்தக் கொடுமைக்கான காரணங்கள் என்கிறது அந்த ஆய்வு. இங்கே 'புதுமைப் பெண்கள்' என விழா எடுத்து அரசியல் வித்தை காட்டுபவர்களையும் அம்பலமாக்க வேண்டியுள்ளது. இதையெல்லாம் செய்யாமல், ராஜாராம் மோகன் ராய்கள் பார்த்துக் கொள்வார்கள் என மௌனப் பண்டாரங்களாகவே வாழ்ந்து தொலைக்கப் போகிறோமா?—**இரத்தினம்**

குப்பாயி கூடையருகே வந்த மீதி பத்து போலீஸாரும் ஆளுக்கு இரண்டு, மூன்று பழங்களை உண்டு வண்டியேறிச் சென்று, ஊஹூம் பறந்தே விட்டார்கள். அப்போது ரசீது புக்கோடு இன்னொருவனும் வந்தான். "என்னது ..யாரு புதுசா? எம்மா நீ சங்கத்துல மெம்பரா...? இல்லை போலத் தோணுதே...! சரி...சரி... தலைச் சுமைக்கு ஒரு ரூவா எடு!"

குப்பாயி கண்களில் கண்ணீர் மட்டும் வரவில்லை, கண்களே கரைந்து வடிந்தது!

—**கேப்டன் சுகுமார்**

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# தேர்தலில் நிற்பதால் லாபமென்ன?

தோற்பது உறுதி என்று தெரிந்தும், ஊர் பேர் தெரியாத பல பேர்கள் தேர்தலில் நிற்கிறார்கள்!

கர்நாடகா, ஆந்திரா மாநில சமீபத்திய சட்ட சபை தேர்தலில் மட்டும் மொத்தமாக சுமார் 6000 பேர் நின்றிருக்கிறார்கள். சுமார் 250 இடங்களைப் பிடிக்க இவ்வளவு பேர்,

இதில் 5500 பேருக்கு வெற்றி வாய்ப்பு அறவே இல்லையென்று தெரிந்தும் டிபாசிட் தொகை இழக்க வேண்டியிருக்குமென புரிந்தும், ஏதோ அசட்டு நம்பிக்கையில் தேர்தலில் நிற்பதாக நினைக்கிறீர்களா? நினைத்தால் நீங்கள் விஷயம் தெரியாத அப்பாவி.

டிபாசிட் தொகையைக்கூட கடன் வாங்கி கட்டி சிலர் தேர்தலில் நிற்கிறார்களே, ஆதாயமில்லாமலா? ஆதாயம் இத்தனை இருக்கிறது ஐயா:-

1. தேர்தலில் வேட்பாளராக நிற்பவருக்கு தற்காலிக தொலைபேசி வசதி உண்டு. (இதனை ஆள் வைத்து அட்ஜெஸ்ட் பண்ணி தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்பும் உண்டு)

2. தேர்தல் பிரச்சாரத்திற்கு வாகனங்களில் செல்ல டீசல் எண்ணெய் பெற கூப்பன்கள் வழங்கப்படுகின்றன.

நிற்பதால் ஏற்படும் வரவு:—

| | | |
|---|---|---|
| ☐ | டீசல் கூப்பன்கள் விற்பனையில் | —ரூ 1000 |
| ☐ | தேர்தலிலிருந்து விலகிக்கொள்ள போட்டி வேட்பாளரிடமிருந்து சன்மானம் குறைந்தது | —ரூ 5000 |
| ☐ | வேறு இன வருமானம் | —ரூ 2000 |
| | மொத்தம் | —ரூ 8000 |

தேர்தலில் நிற்க கட்ட வேண்டிய டிபாசிட் செலவு ரூ 400 போக மீதியெல்லாம் வரும்படி தானே!

தேர்தலில் ஜெயித்தால் மட்டுமே வருவாய் என்று நினைத்திருந்தோம். அமைதியாக தோற்றாலும் இவ்வளவு லாபம் இருக்கிறதா?

ஆதாரம்: தினமணிச்சுடர் —உலகப்பன்

# சர்க்கரை நோய் வராதிருக்க...

நம் உடலில் 120 மில்லி கிராம் சர்க்கரை தான் இருக்க வேண்டும். நாம் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க இது தேவை. மிகுதியான சர்க்கரை கிளைகோஜெனாக மாற்றப்பட்டு ஈரலில் சேமித்து வைக்கப்படுகிறது. பாங்கிரியாஸ் என்னும் கோசம் இன்சுலின் என்னும் திரவத்தை சுரந்து மீண்டும் அதைச் சர்க்கரையாக மாற்றி உடலுக்குத் தருகிறது. பாங்கிரியாஸ் சரியாக வேலை செய்யாவிட்டால் ரத்தத்தில் வரும் சர்க்கரையைப் பிரித்துச் சிறுநீரில் வெளியேற்ற முடியாமல் சிறு நீரகங்கள் சோர்ந்து விடுகின்றன. இந் நோயாளியின் சிறுநீர் வாயிலாக 1 மாதத்திற்கு 10 கிலோ சர்க்கரை வெளியேற்றபடுகிறது. இவர்களை நடமாடும் சிறிய சர்க்கரை ஆலை என்று தமாஷாக கூறலாம்.

இந் நோயைத் தடுப்பதற்கு மாடு, பன்றி இவைகளின் பாங்கிரியாஸிலிருந்து இன்சுலினை எடுத்து ஊசி மூலம் உடலில் செலுத்துகிறார்கள். அதனால் நோய் தணிவது தற்காலிகமே. இன்சுலின் போடுவதை நிறுத்தினால் படபடப்பு இரத்தக் கொதிப்பு எல்லாம் வந்து விடும். அடுத்த கட்டம் மாரடைப்புதான்.

இவ்வளவு கொடுமையான இந்த நோயை வராமலே கூடத் தடுக்க முடியும். இதோ அதற்கான வழிகள்.

1. உடலைச் சோற்று மூட்டையாக்காமல் உடல் உழைப்பை அதிகப் படுத்த வேண்டும்.
2. மாவு, இனிப்புப் பொருள், சர்க்கரையைப் பொதுவாகக் குறைத்துக் கொள்க.
3. உணவில் ராகி (கேழ்வரகு) முருங்கைக்கீரை, வாழையின் பொருள்கள் நிறைய சேர்க்க.
4. கீழா நெல்லி, கரிசலாங்கண்ணி, வேப்பங்கொழுந்து ஆகியவற்றைக் கிடைக்கும் போதெல்லாம் சேர்க்க.
5. இன்சுலினை உற்பத்தி செய்யும் பாங்கிரியாஸ், ஈரல் முதலிய அகவுறுப்புக்களுக்கு யோகாசனங்களே சிறந்த மருந்து. புஜங்காசனம், தனுராசனம், சர்வாங்காசனம் ஆகியவற்றை உடனடியாகச் செய்யுங்கள்,

(அடுத்து: குட்டநோய் வராமல் தடுப்பது எப்படி?)

—சுட்டிபாரதி

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

# ஞாபகசக்திக்கு மருந்து [உண்டா?]

மூளையை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பது தான் ஞாபக சக்தியை வளர்க்க தலையான வழி, அதற்கு வழி?

- ☐ மூளையை சும்மா இருக்கவே விடாதீர்கள். எதையாவது சிந்தியுங்கள். சுவையான விஷயங்களை உற்சாகமாக சிந்தியுங்கள். கற்பனைக் கடலில் திளையுங்கள்.
- ☐ மூளை சோர்வடையும் போது ஓய்வு கொடுப்பது ஞாபக சக்தி குறையாமலிருக்க அவசியம். அதற்கு வழி?
- ☐ எதையும் சிந்தியாமல், கண்ணை மூடிக் கொள்வது ஓய்வல்ல.
- ☐ இயற்கை எழில் கொஞ்சும் அருவிகள், சோலைகள். ஆற்றின் ஓரங்கள், மணல் பரப்பு, கடல் அலை. ஆகியவற்றை மனம் விட்டு நோக்கி மகிழ வேண்டும். இந்த ரசனை பயிற்றுவித்துக் கொள்வது உள்ளத்திற்கு — சிந்தைக்கு ஓய்வு கொடுக்கும்.
- ☐ உடலை நலமாக வைத்திருப்பது ஞாபக சக்திக்கு மிகவும் அவசியம். அவ்வுடலினுள் தான் நல்ல ஒரு இயந்திர மூளையை உருவாக்க முடியும்.
- ☐ மலச்சிக்கல் ஞாபக சக்திக்கு பெரிய எதிரி.
- ☐ மூளைத் திறனை வளர்க்கும் அதிசய சக்தி வல்லாரைக்கு உண்டு. இது நீர் ஓடையின் அருகிலும் ஈரமான இடங்களிலும் படர்ந்து காணப்படும். இவை வட்டமாக இருக்கும். இதனை வேறு சில மருந்துகளுடன் சேர்த்துப் பதப்படுத்தி மூளையை வளர்க்கும் 'அதி அற்புத மருந்து' என்று பலர் விற்பனை செய்கிறார்கள். இதனை வாங்கி உட் கொள்ளலாம். அல்லது தினம் 21 இலைகளை பச்சையாக பறித்து நன்றாக கழுவி வெறும் வயிற்றில் சாப்பிட்டு ஒரு குவளை நீர் பருகினால், இதன் முழுப் பலனையும் பெறலாம். இவ்வாறு 90 நாட்கள் தின்று வந்தால் மிக அதிகமான ஞாபக சக்தி ஏற்பட்டு மூளை இயந்திரம் போல் வேலை செய்யும்.

—நாஞ்சில் சிவா


- ☐ சுட்டி ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வெளிவரும்.
- ☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
- ☐ தனிப்பிரதி 50 காசு
- ☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—

ஆசிரியர் குழு, 'சுட்டி'

1494, அண்ணா நகர், சென்னை-600 040


**சுட்டி முன் இதழ்களைப் படிக்கவில்லையா?**

ஒவ்வொரு இதழும் உங்களை விழிப்பூட்டும் - அறிவூட்டும் சரியாக பிரச்சனைகளைப் பார்க்க துணைபுரியும். முன் இதழ்களை சேமியுங்கள். படிக்காதவர்களுக்கு வழங்கி பயன் படுத்துங்கள். தற்போது இதழ் எண் : 5 முதல் 20 வரை மட்டுமே கைவசம் உள்ளன. பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை [M.O.] அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி விற்பனையாளர்கள் தேவை :** சுட்டி இன்னும் கடைகளில் விற்பனையாகாத எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க. சுட்டியின் வளர்ச்சியிலும், கொள்கையிலும் ஆர்வம் கொண்டோரை சிறப்பாக இப்பணிக்கு நோக்குகிறோம்.

**'சுட்டி'யை இலவசமாக அறிமுகப் படுத்துங்கள்**

"சுட்டி" யைக் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குப் படிக்கக்கொடுத்து அறிமுகப் படுத்த விருப்பமா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் அனுப்புகிறோம். அஞ்சலட்டையில் மாதிரி இதழ் எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்கள் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010





ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40.
அச்சிடுவோர்: J. S. கிட்ராஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 35 லப்பைதெரு, சென்னை-600 002.

1880 / Dec 2010
http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010

கட்டு: மாத இதழ் 1, பிப். 1983 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56



**Sakthi Sugars Limited**

**A PACE SETTER for RURAL PROSPERITY**

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive Increase in yield of sugercane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory
Sakthinagar-638 315.
Periyar District

FREE E BOOKS - www.thamizham.net - TM1880 / Dec 2010